**ONE TWO ACADEMY**

**12 - ஆம் வகுப்பு**

**தமிழ்**

**இயல் - 8**

**மதிப்பெண்கள்:-50** **கால அளவு: 1.30 மணி நேரம்**

I சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **10 x 1 = 10**

1. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாகஉணர்த்தும் குறியீடுகள்

   அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை

2. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத்தலைவனின் இன்றைய நிலப்பகுதி

   அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

3. நான் வெற்றுவெளியில் அலைந்துகொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது

   அ) தமது வீட்டு முகவரியை ஆ) தமது குடும்பத்தை

   இ) தமது அடையாளத்தை ஈ) தமது படைப்புகளை

4. குறியீடுகளைப் பொருத்துக

   அ) பெண் - 1) சமாதா னம்

   ஆ) புறா - 2) வீரம்

   இ) தராசு - 3) விளக்கு

   ஈ) சிங்கம் - 4) நீதி

   அ) 2, 4, 1, 3 ஆ) 2, 4, 3, 1 இ) 3, 1, 4, 2 ஈ) 3, 1, 2, 4

5. ச. த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்

   அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்

   இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

6. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?

அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

7. 'திட்டம்' என்னும் தலைப்பில் 'வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக?' என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் 'வரம்' எதற் குக் குறியீடாகிறது?

அ) அமுதசுரபி ஆ) ஆதிரைப் பருக்கை இ) திட்டம் ஈ) பயனற்ற விளைவு

8. 'முகம்' என்னும் கவிதை இடம் பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு

அ) புதையுண்ட வாழ்க்கை ஆ) மீண்டெழுதலின் ரகசியம்

இ) சுகந்தி சுப்பிரமணியின் படைப்புகள் ஈ) இவற்றில் எதுவுமில்லை

9. ஆவியர் குலத்தில் தோன்றியவன்

அ) பாரி ஆ) ஓரி இ) காரி ஈ) பேகன்

10.தனியொருவனாக இருந்து ஈகையின் பாரத்தைத் தாங்கி செல்பவன்

அ) அதிகன் ஆ) பேகன் இ) நள்ளி ஈ) நல்லியக்கோடன்

II <u>எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும்</u> **8 X 2 = 16**

11.முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

12.இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

13.குறியீட்டு உத்தியில் ஒரு புதுக்கவிதை எழுதுக.

14.'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

15.'விரிபெரு தமிழர் மேன்மை

ஓங்கிடச் செய்வ தொன்றே

உயிர்ப்பணியாகக் கொண்டோன்' - யார், யாரைப் பற்றி, எதற்காகக் கூறுகிறார்?

16.வியர்வை கவிதையில் வெளிப்படும் குறியீடுகளைக் குறிப்பிடுக.

17.ஆற்றுப்படை என்பது யாது?

18.விடைக்கேற்ற வினா அமைத்தல்.

1. நடுவண்அரசு 2005ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

2. சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன.

19.**உறுப்பிலக்கணம்** பழித்தனர்

20.சுகந்தி சுப்பிரமணியனின் இரண்டு கவிதைத் தொகுப்பு நூல்கள் குறிப்பிடுக.

**III <u>எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும்</u> 2 X 4 = 8**

21. மயிலை சீனி. வேங்கட சாமி நினைவுச் சிறப் பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

22. 'ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' - இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக.

23. கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.

**IV <u>எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும்.</u> 1 X 8 = 8**

24.கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.

25.கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப் படுத்துக.

**V <u>எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும்.</u> 1 X 8 = 8**

26.மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க .

27.எச். ஏ. கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.